269—

பாலம் கட்டுதல்.

*6070—திரு. வெ. நடேசன் பால்ராஜ் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வள்ளியூர் பேரூராட்சியைச் சேர்ந்த சண்முகப்புர மக்கள் வள்ளியூருக்கு மழைக்காலத்தில் வந்து செல்ல பாலம் இல்லாத காரணத்தால், கொடுமுடி ஆற்று நீரைக் கடந்துதான் வரவேண்டியிருப்பதால் ஆண்டொன்றுக்கு ஒன்றிரண்டு உயிர்ச் சேதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ் கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

விடை

அ) இல்லை.

(ஆ) திட்டம் ஏதும் தற்போது பரிசிலனையில் இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தன்னிலை விளக்கம்.

18—3—1992 ஆம் நாளன்று அவையில் தாம் பேசியது குறித்து வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கம்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய அவை நடவடிக்கையில், தன்னிலை விளக்கம்ஒன்று அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதியளிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகிறபோது, பேச்சு நடையை எழுதுகிறபோது மாறி சில நேரங்களில் போட்டு விடுகிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கிறபோதே, இதய தெய்வம் புரட்சித் தலைவரை ஒழித்துவிட வேண்டுமென்றுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு பரம